# பறவைகளை மீட்க குளக்கரைகளில் பட்டாசு வெடிக்காதீர்கள்

18.10.14
தினகரன்

கோவை, அக்.18: பறவைகளை மீட்க குளக்கரைகளில் பட்டாசு வெடிக்க வேண்டாம் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் அதிகளவிலான குளங்கள் உள்ளன. இந்த குளங்களை இருப்பிடமாக கொண்டு ஏராளமான பறவைகள் உள்ளன. தற்போது பறவைகள் இடப்பெயர்ச்சி காலம். இதனால், கோவை குளங்களில் அபூர்வமான பறவை இனங்களை காண முடிகிறது. அதிக வீரியத்துடன் வெடிக்க கூடிய பட்டாசுகளை வெடிப்பதால் பறவை இனங்கள் அதிகளவில் பாதிக்கிறது. பட்டாசு வெடிப்பதால் டைஆக்ஸின் என்ற வேதி பொருள் வெளிப்படுகிறது. இதனால், புற்று நோய் பாதிப்பு ஏற்படவாய்ப்புள்ளது. மேலும், மரங்களில் பட்டாசுகள் வெடிப்பதால் அதிலுள்ள பறவைகள் பாதிக்கிறது. குருவிகள் இனம் அழிவின் விளிம்பில் உள்ள நிலையில் குளக்கரைகளில் பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இது குறித்து மரம் அறக்கட்டளை யோகநாதன் கூறுகையில் "பட்டாசு வெடிப்பதால் குருவிகள் முட்டையிட்டு அடைக்காக்க முடியாத நிலையுள்ளது. நாய், பூனை போன்ற விலங்குகளும் பாதிப்படைகிறது. முழுமையாக பட்டாசுகளை வெடிக்க கூடாது என்றால் முடியாத காரியம். ஆனால், குளக்கரைகள் மற்றும் மரங்களின் மீது பட்டாசுகளை வெடிப்பதை தவிர்க்க வேண்டும். இரவு நேரத்தில் முற்றிலும் பட்டாசு வெடிக்காமல் இருக்க வேண்டும்" என்றார்.